ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2483/13 - 2026 අප්‍රේල් මස 10 වැනි සිකුරාදා - 2026.04.10
*2483/13 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**புத்தளம் ஆதார வைத்தியசாலையை அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் நோக்கில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் கொண்டு வருதல்**

புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள புத்தளம் ஆதார வைத்தியசாலை தற்போது வடமேற்கு மாகாண சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அது அந்த மாகாணத்தின் பெரிய வைத்தியசாலைகளில் ஒன்றாகும். வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாக நிலவும் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு, இவ்வைத்தியசாலையை சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் கொண்டு வர முன்மொழியப்பட்டுள்ளது.

2026.03.03 ஆந் திகதி வெளியிடப்பட்ட அமைச்சரவை தீர்மான இல. CP/26/0349/815/023 இன் படியும், வடமேற்கு மாகாண ஆளுநரின் ஒப்புதலுடனும், புத்தளம் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் நோக்கில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. இச்செயல் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளுக்கும் அரசப் பணியாளர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கும் உட்பட்டதாகும்.

**டாக்டர் அனில் ஜாசிங்க,**
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

இல. 385, "சுவசிறிபாய",
வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2026, மாச்சு 31.

EOG 04 - 0054